# ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
## அவசரக்  கூட்டம்

**2021** *ம் ஆண்டு  ஜனவரி  மாதம்* **29** *ம் நாள்  வெள்ளிக் கிழமை  பிற்பகல்* **3.00** *மணியளவில் நடைபெற்ற* ***அவசரக்*** *கூட்ட நடவடிக்கைகள்.*

***முன்னிலை :- திருமதி. D. மல்லிகா, B.Sc,***
***தனி அதிகாரி.***

**பொருள் எண் : 844**

அரசாணை எண் 368 நாள் நிதித்துறை ( SFC- MC) நாள் 07.10.2020ல் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் 2020-21ம் ஆண்டு வரவு செலவு திட்ட உரையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பில் நகர்ப்புற பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படும் பணிகளை ஒருமுறை செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி பணிகளை மாநில உயர்நிலைக்குழு முன்னிலையில் பொருள் வைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் பிரேரணை அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 01.12.2020 ம் தேதிய கடிதம் ந.க.எண் தி4/9361/2020 ல் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு எரிவாயு தகன மேடை பணியினையும் மேற்கண்ட திட்டத்தில் சேர்க்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட திட்டத்தில் பின்வரும் பணிகளை மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு ரூ லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி மதுரை சாலையில் உள்ள பொது மயானத்தில் எரிவாயு தகன மேடை அமைத்தல். | 150.00 |
| 2 | ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி மாதாங்கோயில் தெரு, வாழைக்குளம் ஒத்ததெரு, வாழைக்குளம் தெரு, என்.ஜி.ஓ. காலணி, கீழப்புதுத்தெரு, சக்கரைக்குளம் தெரு, திருவேங்கட அன்னைகள் தெரு, மேட்டுத்தெரு, மேட்டுதெரு மேல் வரிசை மற்றும் சந்திய கிணற்று தெரு ஆகிய இடங்களில் சிறு பாலம் அமைத்தல். | 10.00 |
| 3 | ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பகுதியில் தன்யா நகர், அசோக் நகர், கோவிந்தன் நகர் காலனி பகுதிகளில் 20 வாட்ஸ் எல். இ.டி. விளக்குடன் 250 எண்ணம் தெருவிளக்குகள் அமைத்தல். | 25.00 |
| 4 | ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பகுதியில் தன்யா நகர், அசோக் நகர், கோவிந்தன் நகர் காலனி பகுதிகளில் ஆகிய பகுதிகளில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைத்தல். | 12.00 |
| | மொத்தம் | 197.00 |

எனவே ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பகுதியில் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படும் மேற்கண்ட பணிகளை 2020-21 ம் ஆணைடிற்கு ஒருமுறை செயல்படுத்தப்படும் சிறப்புத்திட்டத்தின் கீழ் அரசு நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ள பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் :- அனுமதிக்கப்பட்டது.**

## ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
## சாதாரணக் கூட்டம்

**2021** *ம் ஆண்டு* ஜனவரி *மாதம்* **29** *ம் நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல்* **4.00** *மணியளவில் நடைபெற்ற* ***சாதாரணக்*** *கூட்ட நடவடிக்கைகள்.*

***முன்னிலை :- திருமதி. D. மல்லிகா, B.Sc,***
***தனி அதிகாரி.***

**பொருள் எண் : 1**

நகராட்சி அலுவலகத்தில் தற்போது உள்ள தேசியக்கொடிக்கான கம்பம் மிகவும் பழுதடைந்து பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளதும் தற்போது கட்டிடத்தின் மேற்கு மூலையில் உள்ளது. தற்போது குடியரசு தினம் 26-01-2021 ல் விழா நடக்க உள்ளதால் கட்டிடத்தில் முன் பகுதியில் புதிய கொடி கம்பம் அமைத்து தேசியக்கொடியினை ஏற்றிட வேண்டியது அவசியமாகும். எனவே கட்டிடத்தில் முன் பகுதியில் புதிய கொடி கம்பம் அமைக்கவும் அதற்காக ரூ 80000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

கட்டிடத்தில் முன் பகுதியில் புதிய கொடி கம்பம் அமைக்கவும் அதற்காக ரூ.80000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் நிர்வாக அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 7491/2020/E1**

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

2019-20 ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வார்டு எண் 24 ல் நியாய விலைக்கடை கட்டி முடிக்கப்பட்டுள்ளதற்கு மின் வசதி பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. எனவே வார்டு எண் 24 ல் நியாய விலைக்கடை கட்டிடத்திற்கு மின் வசதி பணிகள் மேற்கொள்ளவும் அதற்காக ரூ35,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம். பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்; 31 இராஜபாளையம் ரோடு வடிகால் மிகவும் தாழ்வாக உள்ளதால் பொதுமக்களுக்கு இடையூராக உள்ளதாக பொதுமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில், சாலையின் மட்டத்தை விட வடிகால் மிகவும் தாழ்வாக உள்ளதால் விபத்து ஏற்படாமல் இருக்கவும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து வசதி கருதி வடிகால் உயர்த்தி அமைத்திடவும், அதற்காக ரூ1,05,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம். பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அறை, பொறியாளர் அறை ஆகிய இடங்களில் காணொளி காட்சி ஆய்வுக்கூட்டத்திற்காகவும் மற்றும் பொதுப்பிரிவில் BPL காப்பீட்டுத்திட்ட பணிகளுக்காகவும் புதிய அகன்ற அலைவரிசை இணைப்புகள் பெறப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட 3 இணைப்புகளுக்கும் modem வழங்கியதற்கு ஒரு மோடத்திற்கு ரூ3000 வீதம் மூன்று மோடங்களுக்கு ரூ9000 வழங்க BSNL நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சக்தி கேபிள் நெட் ஒர்க் நிறுவனத்தினர் பட்டியல் வழங்கியுள்ளனர்.

மேற்கண்ட 3 இடங்களிலும் modem பொருத்தப்பட்டு அகன்ற அலைவரிசை இணைப்புகள் பெறப்பட்டு செயல்பட்டு வருவதால் தொகை ரூ 9000/- வழங்க அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண் 8118/2017/E1)**

**தீர்மானம் :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

இந்நகராட்சி என்.ஜி.ஒ.ஒ. காலணி பகுதியில் நுண் உரக்குடில் அமைக்கும் பணியினை மேற்கொள்ள ஆட்சேபனை தெரிவித்து திரு பத்மநாபன், திருப்பதி ஆகியோர் ஸ்ரீவில்லிப்புத்தூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் அசல் வழக்கு எண்; 20/2020 தாக்கல் செய்ததில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் (Standing Council) திரு எஸ்.சௌந்திர ராஜன் ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு எஸ்.சௌந்திர ராஜன் மேற்கண்ட வழக்கில் கட்டணம் ரூ3000/- வழங்க கோரியுள்ளார்.

மேற்கண்ட வழக்கில் எதிர் வழக்குறை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதால் நகராட்சி வழக்கறிஞர் திரு எஸ்.சௌந்திர ராஜன் என்பவருக்கு கட்டணம் ரூ3000/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம். **( ந.க.எண் 1468/2020/E1)**

**தீர்மானம் :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சிக்குட்பட்ட கீழப்பட்டி தெருவில் உள்ள பெண்கள் கழிப்பிடத்தில் 1.5 எச். பி. கம்ப்ரசர் மோட்டார் பழுதுஏற்பட்டு மீண்டும் சரி செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே கீழப்பட்ட தெரு கழிப்பிடத்திற்கு புதிய மின் மோட்டார் பொருத்த வேண்டியது அவசியமாகும். எனவே கீழப்பட்டி தெரு கழிப்பிடத்திற்கு புதிய மின் மோட்டார் வாங்கி பொருத்துவும் அதற்காக ரூ24,200/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம். பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சிக்குட்பட்ட ஆத்துக்கடை தெருவில் சிறு பாலம் உடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. அதன் காரண மாக பொதுமக்களுக்கும் போக்கு வரத்திற்கும் இடையூராக உள்ளது. எனவே பொதுமக்கள் மற்றும் போக்கு வரத்து நலன்கருதி ஆத்துக்கடை தெருவில் Grill Mesh ல் ஆன சிறு பாலம் அமைக்கவும், அதற்காக ரூ34,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம். பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் :-</u> அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 8</u>**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சிக்குட்பட்ட குலாலர் தெருவில் கோட்டை தலை வாசல் பள்ளி பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தினை தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்ததை அகற்றி காலியிடத்தினை நகராட்சி வசம் எடுக்கப்பட்டது. மேற்கண்ட காலியிடத்தை மீண்டும் ஆக்கிரமிப்பு செய்யாமல் பாதுகாக்கவும், வேலி அமைத்து Onsite composting அமைக்கவும் வேண்டியது அவசியமாகும்.

எனவே குலாலர் தெருவில் கோட்டை தலை வாசல் பள்ளி பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தினை ஆக்கிரமிப்பு செய்யாமல் பாதுகாக்கவும், வேலி அமைத்து Onsite composting அமைக்கவும் அதற்காக ரூ40,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம். பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் :-</u> அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 9</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் **29**, கம்மாப்பட்டி நடுத் தெரு கதவு எண் 176A என்ற முகவரியில் வசித்து வரும் திருமதி. கோவிந்தம்மாள் மற்றும் மூவர் தனது தந்தை காஞ்சிபுரம் மாவட்டம் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி கோவிலுக்கு சென்ற போது காணவில்லை என ஜி**–5** மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்து முதல் தகவல் அறிக்கை பெற்றுள்ளார். நாளது தேதி வரை தனது தந்தை கிடைக்கவில்லை என்பதால் இறந்து விட்டார் என இறப்பு பதிவு செய்து தருமாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஸ்ரீவில்லிபுத்தூர் நீதி மன்றத்தில் OS 65/2020 ல் நகராட்சி ஆணையாளர் அவர்களை பிரதி வாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு நகராட்சி ஆணையாளர் சார்பாக வழக்கறிஞர் அவர்கள் 11.01.2021 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதுரை மேற்கொண்டார். மேற்படி வழக்கிற்குரிய வழக்கறிஞர் கட்டணம் ரூ.3000/- ஐ நகராட்சி வழக்கறிஞர் திரு. எஸ். சௌந்தரராஜன் அவர்களுக்கு வழக்கு கட்டணம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

ந. க. எண் 7767/2020/எச்1

**<u>தீர்மானம் :-</u> அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 10</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட திருவண்ணாமலை சாலையில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தினில் இரும்பினில் ஆன பெட்டி அமைத்து திருமதி. யாஸ்மின் சுலைக்காள் என்பவரை முகவராக தேர்ந்தெடுத்து அன்னார் மூலம் தேநீர் விற்பனை செய்ய The TamilNadu Tea Plantation Limited, நிறுவனத்தில் கடிதம் Ref.No. 6243 /2017/ S4, Date: 04.01.2021 ன் படியும் தமிழ்நாடு அரசின் சார்பாக உற்பத்தியாகும் தேயிலைகளை விற்பனை செய்யும் பொருட்டும் மேற்கண்ட தேயிலை மூலம் தயார் செய்யப்படுகின்ற தேநீர்களைவிற்பனை செய்யும் பொருட்டும் இந்நகர் திருவண்ணாமலை சாலையில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தினில் 8*8=64 S.ft அளவிலான இடத்தினை ஒதுக்கீடு செய்தும் மேற்கண்ட இடத்திற்கு மாத வாடகை ரூ.1200/- + GST Rs.216/- என நிர்ணயம் செய்யவும் மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

ந. க. எண் 5081/2020/எச்1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 11**

2020-21 ம் ஆண்டிற்கான 15 வது நிதிக்குழு திட்டத்தின் ( முதல் தவணை ) கீழ் ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சிக்கு ரூ9165759/- நிதி விடுவிக்கப்படுள்ளதாகவும் இத்திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக மின் அஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கபப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்ட நிதியில் நகரில் சில பகுதிகளில் feeder main மற்றும் distribution main இல்லாத காரணத்தினால் குடியிருப்புகளுக்கு வீட்டு குடிநீர் இணைப்பு வழங்க இயலாத நிலையினை மாற்றி மதிப்பெண் திட்டத்தில் ( Tied Scheme Marks ) 80 சதவீத வரிவிதிப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கினால் மட்டுமே 2021-22 முதல் 2026-27 வரை ஐந்தாண்டுகளுக்கு தொடர்ந்து மானியத்தொகை 9 (Tied Grant) பெற இயலும்.

எனவே கீழ்கண்ட இடங்களில் feeder main மற்றும் distribution main அமைக்கப்படவேண்டியுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ லட்சத்தில். |
|---|---|---|
| 1 | மதுரை சாலையில் (150 mm DI K7) feeder main அமைத்தல், பண்டிட் ஜவஹர்லால் நேரு சாலை (200 mm DI K7) feeder main அமைத்தல் மற்றும் மதுரை சாலை தெற்குப்புறம் 4 குறுக்குத்தெருக்கள், ஓம்சக்தி நகர், பாரதி நகர், தன்யா நகர் தெற்கு புறம் காளையார் குறிச்சித்தெரு மற்றும் சக்தி நகர் பகுதிகளில் distribution main (90 mm PVC 6 Ksc) அமைத்தல். | 31.00 |
| 2 | நகராட்சி அலுவலக தண்ணீர் தொட்டி முதல் தன்யா நகர் வரை (200 mm DI K7) feeder main அமைத்தல் | 40.00 |
| 3 | சாத்தூர் சாலை 200 mm DI K7 feeder main, அசோக் நகர் பிரதான சாலை, அசோக்க நகர் குறுக்குத்தெரு 1 மற்றும் 2 ரெங்கநாதபுரம் பிரதான சாலை மற்றும் தெற்குப்புறம் குறுக்குத்தெரு, அய்யம் பட்டி குறுக்குத்தெரு, பெருமாள் பட்டி குறுக்குத்தெரு, மடத்துப்பட்டி குறுக்குத்தெருக்கள், மல்லபுரம் தெரு குறுக்குத்தெரு, கம்மாபட்டி குறுக்குத்தெரு மற்றும் வாழைக்குளம் குறுக்குத்தெருக்களில் 90 mm PVC distribution main அமைத்தல். | 40.00 |
| | மொத்தம். | 111.00 லட்சம். |

மேற்கண்ட பணிகளை மேற்கொண்டு குடிநீர் இணைப்புகளை கூடுதலாக வழங்கினால் மட்டுமே Tied Grant பெற்றுக்கொள்ள ஏதுவாக அமையும். எனவே மேற்கண்ட பணிகளை 2020-21 ம் ஆண்டிற்கான 15 வது நிதிக்குழு திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1) அரசாணை எண் (டி) 334, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள்; 03-08-2016 ன்படி முதல் நிலை நகராட்சிக்கு ரூ40.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி அதிகாரம் வழங்கப்பட்டுளள்ளதால் மேற்கண்ட பணிகளுக்கு மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

2) மதிப்பீட்டுத்தொகை ரூ111.00 லட்சம் என உள்ளதால் திட்ட நிதி ரூ9165759/- தவிர கூடுதல் நிதி ரூ ரூ19,34,241/- ஐ நகராட்சி குடிநீர் நிதியிலிந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :-** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 12**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்திற்கு வடபுறம் அமைந்துள்ள முன்னாள் படைவீரர் நலன் அலுவலகம் கடந்த 20.11.2020 முதல் காலி செய்யப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட இடத்தில் வாடகை முறையில் அமையவிருந்த கனரா வங்கியும் தனது ஒப்பந்தத்தினை ரத்து செய்து விட்டாதாலும் நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு நகராட்சியின் வருவாயினை பெருக்கும் வகையில் மேற்கண்ட இடத்தினில் தரைத்தளத்தினில் 15 கடைகள் மற்றும் முதல் தளத்தில் 15 கடைகள் அமைத்து வாடகை முறையில் குத்தகைக்கு விடும் பொருட்டு மேற்கண்ட கடைகளுக்கு ( Pre Auction ) முன் பொது ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடுவதற்கும் ஆகும் விளம்பர கட்டணம் வழங்குவதற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.

ந. க. எண் 307/2021/அ2

**தீர்மானம் :-** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 13**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மூன்றாண்டு குத்தகை இனங்களில் 1) ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பேருந்து நிலையத்தினுள் ஓரிடத்தில் நிலையில்லாமல் சம்சா, பால்கோவா, பூ மற்றும் இதர பொருட்கள் விற்பனை செய்பவர்களிடம் தினந்தோறும் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் 2) ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பேருந்து நிலையத்தினுள் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் ஆகிய இரண்டு இனங்களும் 31.03.2021 ம் தேதியுடன் முடிவடைகின்றது. எனவே மேற்கண்ட 2 குத்தகை இனங்களையும் 01.04.2021 ம் தேதியிலிருந்து பொது ஏலம் விடுவதற்கும் ஏல அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடுவதற்கும் அதற்கான விளம்பர கட்டணம் வழங்குவதற்கும் மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.

ந. க. எண் 682/2021/அ2

**தீர்மானம் :-** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 14**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ந.க.எண் 1815/2020/ ஆ2, நாள் 19.10.2020 ன் படி திருநெல்வேலி மண்டலத்தில் உள்ள 19 நகராட்சிகளில் தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்களை தனியார் வழியில் ( Out source ) மூலம் நியமனம் செய்து பணிகளை மேற்கொள்ள தகுதி வாய்ந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி 18.08.2020 மற்றும் 08.09.2020 நாட்களில் டைம்ஸ் ஆப் இந்தியா மற்றும் புரட்சித் தலைவி நமது அம்மா ( தமிழ்நாடு பதிப்பு ) செய்தி தாள்களில் விளம்பரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேவி அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்காணும் விளம்பரம் செய்யப்பட்டமைக்கான மொத்த செலவுத் தொகை ரூ.84616/- திருநெல்வேலி மண்டலத்தில் உள்ள 19 நகராட்சிகள் சார்பாக கடையநல்லூர் நகராட்சி (Eyedea Brand Solution) சென்னை செய்தித்தாள் நிறுவனத்திற்கு விளம்பரக் கட்டணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பங்குத் தொகை ரூ.4453/- கடையநல்லூர் நகராட்சிக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வழங்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்ககலாம்.

ந. க. எண் 3219/2017/எச் 1

**தீர்மானம் :-** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 15**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி குடிநீர் டேங்கர் வாகனம் TN67V1954 க்கு பேட்டரி இயங்காததால் வாகனத்தினை சரிவரி இயக்க முடியவில்லை. பேட்டரி 01-12-2017 தேதியில் பொருத்தப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் பேட்டரி மாற்றம் செய்யப்படவேண்டியுள்ளது.

எனவே அலுவலக குடிநீர் டேங்கர் வாகனம் TN67V1954 க்கு பேட்டரி ( 13 பிளேட் , 12 வோல்ட்) புதியது வாங்கவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ 11000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்ககலாம்.

**தீர்மானம் :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 16**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி மங்காபுரம் கீழ்பக்கம் வடக்குத்தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய் இல்லாததால் சுமார் 15 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க இயலாமல் உள்ளது. மேற்கண்ட தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைப்பதால் பொதுமக்கள் நலனுக்கு குடிநீர் இணைப்பு வழங்க இயலும் என்பதாலும் குடிநீர் இணைப்பு கட்டணம் மாதாந்திர கட்டணம் மூலம் நகராட்சிக்கு வருவாய் கிடைக்க உள்ளதை கருதியும் மேற்கண்ட பகுதியில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்கவும் அதற்காக ரூ1,20,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :–**

மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம். பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். **ந. க. எண் 2020/E 1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 17**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி அலுவலக தண்ணீர் தேக்க தொட்டியில் உள்ள ஊரணிப்பட்டி மேல் நிலை தொட்டிக்கு செல்லும் 20 எச். பி. மோட்டார் எண்: 1 பழுதடைந்துள்ளது. மேற்கண்ட 20 எச். பி. மோட்டார் ரீவைண்டிங் , ரோட்டார், திரஸ்ட் பேடு, கன் மெட்டல் புஸ், சாப்ட் பொருத்துதல், இம்பளர் பொருத்துதல், பெயிண்ட் அடித்தல் போக்குவரத்து மற்றும் திரும்ப மாட்டுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவு ரூ27,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிவழங்கலாம். குநிநீர் விநியோக அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 18**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி அலுவலக தண்ணீர் தலைமையிடத்தில் உள்ள கிணறு எண்; 6 ல் உள்ள 5 எச். பி. மோட்டார் பழுதடைந்துள்ளது. மேற்கண்ட 5 எச். பி. மோட்டார் ரீவைண்டிங் , ரோட்டார், திரஸ்ட் பேடு, கன் மெட்டல் பேரிங், சாப்ட் பொருத்துதல் கிளிப் பொருத்துதல், போக்குவரத்து மற்றும் திரும்ப மாட்டுதல் மற்றும் இதர பழுது வேலைகள் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவு ரூ15,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிவழங்கலாம். குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 19**

நகராட்சி பகுதியில் பின்வரும் 5 இடங்களில் உள்ள சிறுமின்விசை இறைப்பான்களில் உள்ள மோட்டார்கள் மிகவும் பழுதடைந்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

1. மங்காபுரம் மெயின் ரோடு.
2. கீம்பெளபட்டி கடைசி தெரு
3. இடைய பொட்டல் தெரு
4. சந்தைப்பேட்டை தெரு.
5. கீழப்பட்டி தெரு கல்பாலம்.

எனவே மேற்கண்ட இடங்களில் புதிய மின் மோட்டார்கள் வாங்கி பொருத்த வேண்டியது அவசியமாகும். மேற்கண்ட 5 இடங்களில் 1.5. எச்.பி. கம்ப்ரசர் புதியதாக வாங்கி பொருத்தவும் அதற்கான உத்தேச செலவு ரூ2,00,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

நகரின் குடிநீர் விநியோக அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம். (ந. க. எண் 6510/2020/இ1)

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 20**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN 84 H 3991 (TATA ACE ) க்கு தகுதிச் சான்று பெற வாகனத்தை பழுது நீக்கும் பணிக்கு ரூ.30,000/- க்கு நகர்மன்ற தீர்மான எண் 815 நாள் 31.12.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கு 25.01.2021 ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிளிள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sp.Spl 166, வத்திறாயிருப்பு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிட், வத்திறாயிருப்பு. 626 132. | Sp.Spl 177, Rajapalayam Agro Engg & Service Co-op Centre Ltd, | R.A. 267 Srivilliputtur Block Agro Engg & Service Co-op Centre Ltd, |
|---|---|---|
| Rs. | Rs. | Rs. |
| 31080 | 30650 | 29900 |

**அலுவலகக்குறிப்பு**

வரப்பெற்ற **3** விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தந்துள்ள விலைப்புள்ளி தொகை ரூ.29,900/- R.A. 267, Srivilliputtur Block Agro Engg & Service co-op Centre Ltd என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

ந. க. எண் 7263/2020/எச்2

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 21**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2020-21 ன் கீழ் வார்டு எண்: 26 மேட்டுத்தெருவில் போர் வெல் மினி பவர் பம்ப் மற்றும் பைப்ப லைன் அமைக்கும் பணிக்கு 13-01-2021 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திருஅ.பாபு, ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 0.14% குறைவு. |
| 2 | திரு G.வெங்கடேசன், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 4.17% அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருஅ.பாபு என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.14% குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு**

1) மேற்கண்ட பணியினை ரூ2,50,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க. எண்: சி3/4287/2020, நாள்: 23-12-2020 ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருஅ.பாபு என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.14% குறைவாக உள்ளதால் அன்னாரின்

ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ளலாம். திட்டப்பணிகளின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன்ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**தீர்மானம் :-** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 22</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில் முன் பகுதியில் புதிய கொடி கம்பம் அமைக்கும் பணிக்கு 21-01-2021 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | M/S ஸ்ரீ கங்கா எலக்ட்ரிகல்ஸ், திருநெல்வேலி. | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |
| 2 | M/S ஸ்ரீ ஜோதிவேல் ஹார்டு வேர்ஸ், திருநெல்வேலி. | மதிப்பீட்டைவிட 0.89% அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S ஸ்ரீ கங்கா எலக்ட்ரிகல்ஸ், திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மேற்கண்ட பணியினை ரூ 80,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற அனுமதி பெற பொருள் வைக்கப்பட்டு தனி அலுவலர் முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S ஸ்ரீ கங்கா எலக்ட்ரிகல்ஸ், திருநெல்வேலி. என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ளலாம். 26-01-2021 ல் குடியரசு தின விழா நடைபெற உள்ளதால் அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கப்படதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**தீர்மானம் :-** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 23</u>**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி அலுவலகத்தில் வீடீயோ கான்பரன்ஸிங் மூலமாக அனைத்து ஆய்வுக்கூட்டங்கள் மற்றும் ஒர்க்ஷாப் பயிற்சி ஆகியவை நடைபெறுகிறது. மேலும் தெருவோர வியாபாரிகள் கடன் வழங்கும் திட்டத்திற்கு இணைய தளத்தில் பதிவு செய்யவும், மேற்கண்ட வீடீயோ கான்பரன்ஸிங் நடைபெற பின்வரும் கணிணி உப பொருள்கள் தேவைப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | Speaker | 2 Sets ( 4 Nos) |
| 2 | Web Camera | 2 |
| 3 | Wifi Mouse | 2 |
| 4 | USB hub 4 port | 2 |
| 5 | Key Board with Mouse. | 4 |
| 6 | Mike | 2 |
| 7 | Bio Metric | 3 |
| 8 | Spike guard with Extension Board. | 3 |

மேற்கண்ட பொருள்கள் உடனடியாக வாங்க வேண்டியது அவசியமாகின்றது. மேற்கண்ட பொருள்கள் வாங்கவும் அதற்கான செலவு தொகை ரூ 50,000/- க்கும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் அனுமதிக்கப்பட்டது.

அதன்படி டோனர்கள் வாங்க பின்வரும் மூன்று நிறுவனங்களில் விலைப்புள்ளி பெறப்பட்டது.

| வ. எண். | பணி விவரம். | சன் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர். | | K.B. சிஸ்டம்ஸ் சர்விஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர். | | டிஜி டெக் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விலை | தொகை | விலை | தொகை | விலை | தொகை |
| 1 | Speaker-2 | 1600 | 3200 | 1800 | 3600 | 1900 | 3800 |
| 2 | Web Camera-2 | 3500 | 7000 | 3700 | 7400 | 3800 | 7600 |
| 3 | Wifi Mouse-2 | 1300 | 2600 | 1500 | 3000 | 1700 | 3400 |
| 4 | USB hub 4 port-2 | 1400 | 2800 | 1600 | 3200 | 1800 | 3600 |
| 5 | Key Board with Mouse-4 | 2200 | 8800 | 2300 | 9200 | 2500 | 10000 |
| 6 | Mike-2 | 1600 | 3200 | 1800 | 3600 | 1900 | 3800 |
| 7 | Bio Metric-3 | 5300 | 15900 | 5500 | 16500 | 5600 | 16800 |
| 8 | Spike guard with Extension Board.-3 | 1050 | 3150 | 1250 | 3750 | 1450 | 4350 |
| | மொத்தம் | | **46650** | | **50250** | | **53350** |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சன் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி ஒப்புக்கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) தெருவோர வியாபாரிகள் கடன் வழங்கும் திட்டத்திற்கு இணைய தளத்தில் பதிவு செய்யவும், வீடீயோ கான்பரன்ஸிங் நடைபெற கணிணி உப பொருள்கள் வாங்கவும் அதற்கான செலவு தொகை ரூ**50000/-** க்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் அனுமதிக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

2) குறைந்த விலைப்புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் எண் : 24</u>

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி அலுவலக தண்ணீர் தேக்க தொட்டியில் உள்ள ஊரணிப்பட்டி மேல் நிலை தொட்டிக்கு செல்லும் 20 எச். பி. மோட்டார் எண்: 1 பழுதடைந்துள்ளதை சரி செய்ய 11-01-2021 ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட பின்வரும் 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண். | பணி விவரம். | திரு எம்.முத்துராம கிருஷ்ணன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | | செல்வம் எலக்ட்ரிகல்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர். | | திரு தங்கவேல், ஸ்ரீவில்லிப்புத்தூர். | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | **20** எச். பி. மின் மோட்டார் மோட்டார் கழற்றி ரீவைண்டிங் செய்து திரஸ்ட் பேடு, கன் மெட்டல் புஸ், சாப்ட் பொருத்துதல் பெயிண்ட் அடித்தல் போக்குவரத்து மற்றும் | 27000 | 27000 | 28350 | 28350 | 29200 | 29200 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | திரும்ப மாட்டுதல். | | | | | | |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு எம்.முத்துராம கிருஷ்ணன், ஸ்ரீவில்லிப்புத்தூர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

குறைந்த விலைப்புள்ளி ஒப்புக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :-** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் எண் : 25</u>

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி அலுவலக தண்ணீர் தலைமையிடத்தில் உள்ள கிணறு எண்; 6 ல் உள்ள 5 எச். பி. மோட்டார் பழுதடைந்துள்ளதை சரி செய்ய 25-01-2021 ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட பின்வரும் 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண். | பணி விவரம். | திரு எம்.முத்துராம கிருஷ்ணன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | | செல்வம் எலக்ட்ரிகல்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர். | | திரு தங்கவேல், ஸ்ரீவில்லிப்புத்தூர். | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 எச். பி. மின் மோட்டார் மோட்டார் கழற்றி ரீவைண்டிங் செய்து திரஸ்ட் பேடு, கன் மெட்டல் புஸ், சாப்ட் பொருத்துதல் பெயிண்ட் அடித்தல் போக்குவரத்து மற்றும் திரும்ப மாட்டுதல். | 15000 | 15000 | 16500 | 16500 | 17000 | 17000 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு எம்.முத்துராம கிருஷ்ணன், ஸ்ரீவில்லிப்புத்தூர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** குறைந்த விலைப்புள்ளி ஒப்புக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :-** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் எண் : 26</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் பகுதியில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பொது மக்களுக்கு விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீடு வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகள் விவரங்களை ( சுமார் 40000 பக்கங்கள் ) இணைய தளத்தில் இருந்து பிரிண்ட் எடுக்க வேண்டியுள்ளது. மேலும் தெருவோர வியாபாரிகளுக்கு கடன் வழங்குவதற்கு பயனாளிகளின் விவரங்களை ( சுமார் 12000 பக்கங்கள் ) இணையதளத்தில் இருந்து பிரிண்ட் எடுக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட இரு பணிகள் மேற்கொள்ள நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு 45 எண்ணம் டோனர்கள் வாங்க வேண்டியது அவசியமாகின்றது. மேற்கண்ட இரு பணிகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டியதிருப்பதால் 45 எண்ணம் டோனர்கள் வாங்கவும் அதற்கான செலவு தொகை ரூ.68,000/- க்கும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் அனுமதிக்கப்பட்டது. அதன்படி டோனர்கள் வாங்க பின்வரும் மூன்று நிறுவனங்களில் விலைப்புள்ளி பெறப்பட்டது.

| வ.எண் | பணி விவரம் | சன் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர் | | K.B. சிஸ்டம்ஸ் சர்வீஸ், ஸ்ரீவில்லிபுத்தூர் | | டிஜிடெக் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விலை | தொகை | விலை | தொகை | விலை | தொகை |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | டோனர்கள் 45 எண்ணம் | 1500 | 67500 | 1700 | 76500 | 1800 | 81000 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சன் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி ஒப்புக் கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) நகராட்சி அலுவலக கணிணிகளுக்கு 45 எண்ணம் டோனர்கள் வாங்கவும் அதற்கான செலவு தொகை ரூ.68,000/ க்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் அனுமதிக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.
2) குறைந்த விலைப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

( ந. க. எண் 7036/ 2020 / இ 1)

**தீர்மானம் :-** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>,பொருள் எண் : 27</u>**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு Chain Saw ( Heavy Duty Engine – 18" Blade) வாங்க 19-01-2021 ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட பின்வரும் 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண். | பணி விவரம். | கங்கா அக்ரோ கார்ப்பொரேசன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | | கிரீனி அக்ரோ பார்ம், ஸ்ரீவில்லிப்புத்தூர். | | வருணா பார்ம் சர்வீஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர். | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Chain Saw ( Heavy Duty Engine – 18" Blade) | 28500 Tax5130 Total 33630 | 28500 Tax5130 Total 33630 | 36400 | 36400 | 35400 | 35400 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கங்கா அக்ரோ கார்ப்பொரேசன், ஸ்ரீவில்லிப்புத்தூர். என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

குறைந்த விலைப்புள்ளி ஒப்புக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண் : 28</u>

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பராமரிப்பில் உள்ள மரங்கள் இயற்கை இடர்பாடுகளினால் முறிந்து விழுந்தாலோ அல்லது பட்டுப்போய் காற்றினால் முறிந்து விழுந்தாலோ பொது மக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு இன்று உடன் அப்புறப்படுத்த வேண்டியது அவசியமாகும். அவ்வாறு மரங்களை அகற்றுவதற்கு Chain Saw ( Heavy Duty Engine – 18" Blade) வாங்க வேண்டியது அவசியமாகும். எனவே நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு Chain Saw ( Heavy Duty Engine – 18" Blade) வாங்கவும், அதற்கான செலவு தொகை ரூ 34000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் :-** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 29</u>

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி திரு.வி.க. தொடக்கப்பள்ளி கட்டிடத்தில் பள்ளி குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு போதிய கழிப்பிட வசதிகள் இல்லை. மேற்கண்ட பள்ளிக்கு கழிப்பிடம் புதிதாக கட்டவும் மற்றும் பள்ளி கட்டிடங்கள் பழுது வேலைகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

எனவே திரு.வி.க. தொடக்கப்பள்ளி கட்டிடத்தில் பள்ளி குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு கழிப்பிடம் புதிதாக கட்டவும் மற்றும் பள்ளி கட்டிடங்கள் பழுது வேலை மேற்கொள்ளவும் அதற்காக ரூ 6,00,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம். பணியினை கல்வு நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 30**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி வார்டு எண் 24 ல் நியாய விலைக்கடை கட்டிடத்திற்கு மின் வசதி பணிகள் மேற்கொள்ள 25-01-2021 ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திரு எம்.கே.ஜின்னா, ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 0.08% |
| 2 | திரு கோ.வெங்கடேசன், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 4.87% அதிகம். |
| 3 | திரு அ.பாபு, ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 1.50% அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு எம்.கே.ஜின்னா, ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.08 சதவீதம் குறைவாக உள்ளதால் அன்னாரின் விலைப்புள்ளியினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு**

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு எம்.கே.ஜின்னா, ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.08 சதவீதம் குறைவாக உள்ளதால் அன்னாரின் விலைப்புள்ளியினை ஒப்புக்கொள்ளலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றும் அங்கீகாரம் செய்யலாம்.

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 31**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி திரு. வி.க. மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்குப்பக்கம் உள்ள கட்டிடங்கள் மழைநீர் கசிவு ஏற்பட்டு பழுதான நிலையில் பராமரிப்பு செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. மேலும் 11 ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு மாணவர்களுக்கு போதிய இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆய்வுக்கூட வசதிகள் இல்லாத நிலை உள்ளது. எனவே மானவர்கள் நலன் கருதி திரு. வி.க. மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்குப்பக்கம் உள்ள கட்டிடங்கள் பராமரிப்பு செய்யவும் ஆய்வுக்கூட வசதிகள் செய்யவும் அதற்காக ரூ15,00,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம். பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 32**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி திரு.வி.க. மேல்நிலைப்பள்ளியில் பழைய பயனற்ற மரச்சாமான்கள் தற்போது இருப்பில் உள்ளது. பழைய பயனற்ற மரச்சாமான்கள் உடைந்த நிலையில் உள்ளதை சீர் செய்து 12 ம் வகுப்பு மாணவர்களுக்கு இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆய்வுக்கூட வசதிகள் செய்ய வேண்டியுள்ளதால் இதற்கு மேஜைகள் 12 அடி 4 அடி 3 அடி அளவில் 15 எண்ணம் தேவைப்படுகிறது.

எனவே ஆய்வுக்கூடத்திற்கு தேவையான மேஜைகள் 12 அடி 4 அடி 3 அடி அளவில் 15 எண்ணம் பழைய மரச்சாமான்களை பயன்படுத்தி செய்யவும் அதற்காக ரூ1,40,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம். பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 33**

குலாலர் தெருவில் கோட்டைத் தலைவாசல் பள்ளி பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தினை ஆக்கிரமிப்பு செய்யாமல் பாதுகாக்கவும், வேலி அமைத்து Onsite Composting அமைக்க 19.01.2021 ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டிற்கு விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. அ. பாபு, ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | மதிப்பீட்டை விட 0.37% குறைவு |
| 2 | திரு. எம். சிவக்குமார், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | மதிப்பீட்டை விட 6.21% அதிகம் |
| 3 | எம். கே. எலக்ட்ரிக்கல்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். | மதிப்பீட்டை விட 2.60% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. அ. பாபு, ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளி மதிப்பீட்டை விட 0.37% சதவீதம் குறைவாக உள்ளதால் அன்னாரின் விலைப்புள்ளியினை ஒப்புக் கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. அ. பாபு, ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளி மதிப்பீட்டை 0.37% சதவீதம் குறைவாக உள்ளதால் அன்னாரின் விலைப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம்.

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் எண் : 34</u>

ஆத்துக்கடை தெருவில் கிரில் மெஸ் சிறு பாலம் அமைக்க 25.01.2021 ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டிற்கு விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. அ. பாபு, ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | மதிப்பீட்டை விட 0.08% குறைவு |
| 2 | திரு. எம். சிவக்குமார், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | மதிப்பீட்டை விட 0.79% அதிகம் |
| 3 | ஆருத்ரா, எலக்ட்ரிக்கல்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். | மதிப்பீட்டை விட 2.60% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. அ. பாபு, ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளி மதிப்பீட்டை விட 0.08% சதவீதம் குறைவாக உள்ளதால் அன்னாரின் விலைப்புள்ளியினை ஒப்புக் கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. அ. பாபு, ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளி மதிப்பீட்டை 0.08% சதவீதம் குறைவாக உள்ளதால் அன்னாரின் விலைப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம்.

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**